கற்பம் பற்றிய ஆய்வுகள்

256. அனுபவ வைத்தியம்.

1992
Feb

256. அனுபவவைத்தியம்

2

1992

256. அனுபவ வைத்தியம்

மொத்த பக்கங்கள் - 123

3.2.92 - 26.2.92

1992
Feb

256. அநுபவ வைத்தியம்

ஏடு எண் : 256

பெயர் : அநுபவவைத்தியம்

அளவு : 24 x 3

வரி : 7

ஏடு எண்ணிக்கை : (1-65) (21-90)

உரைநடை

எடுத்த தேதி : 3.2.92

முடித்த தேதி : 26.2.92

மொத்தபக்கங்கள் : 123

படியெடுத்தவர் : தி. லெட்சுமி.

பொருளடக்கம்

3.2.92

1.அ. விக்கல் சன்னிக்கு மருந்து

அசமதாகம், திப்பிலிமூலம், ஏலம், லவங்கம், கொத்தமல்லி, கொடிவேலிவேர், நாகப்பூ, இருவேலிவேர், சுக்கு, குரோசாணி ஓமம், மிளகு, இந்துப்பு இவை காசிடை கூட்டவும். திப்பிலி, வில்வபத்திரிசார், மாதளை பிஞ்சு கூட்டவும் தீரும்.

இருமலுக்கு புகை

கடுக்காய், தான்றிக்காய், நெல்லிப் பருப்பு, தேவதாரி இவை பொடி செய்து சீலையில் பரப்பி திரிச்சு விளக்கில் போட்டு திரிபுகை பிடிக்க தீரும்.

ஆ. நீரடைப்புக்கு சுரத்துக்கெல்லாம் உச்சிதமான மருந்து

ஆனைதாமரைவேர், அரசன் பாசியும் அரைத்து பாலில் கொடுக்க நீர் விழும். கல்லுகளெல்லாம் விழும்.

சுரத்துக்கு சாதிலிங்கம் வராகனிடை – 1 நெல்லிக்காய் கந்தகம் வராகனிடை – 1 இதுரெண்டும் பொடி செய்து குழாவில் வைத்துக் கொண்டு சுக்கு கஷாயத்தில் விடவும் வெட்டும் மருந்து கஷாயம், பேராமுட்டி, சித்தாமுட்டி, நன்னாரி இதில் கொள்ள சுரம் உடனே நிற்கும்.

கபாலயாடிக்கு

சுக்கு, மிளகு, திப்பிலி, மரமஞ்சள்,
நல்லமஞ்சள், சதாக்குப்பை, கற்பூரம் இது நறுக்கி
2.அ பொடி பண்ணி சீலையில் தடவி சுருட்டி தாயணைத்து
பிடிக்கவும். மண்டையாடி தீரும்.

சன்னிவாத சுரத்துக்கு

வெந்த சுக்குஅரத் தையுடன் நாலும்
வெறக்கல் வேர்நா ரத்தையுடன் கூட்டி
வொத்த நொச்சிதேன் நொகந்தபொதிந்து நீர்யாகுமதி
? சேர்த்து எரித்துமன் செப்புடன் கொள்ளாரா
சாந்தம் யாதுகேளுடம் சன்னிவாத சுரம் போமே

சன்னி ஆனந்தம்

சாதிலிங்கம், வெங்காரம், நாவி,
. . . . இவை வகைக்கி வராகனெடை - 2
ஆ. எலுமிச்சன் பழஞ்சாள் ஊட்டரைத்து சிறுபயறளவு
உருண்டை பண்ணி நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு
இஞ்சி சாத்திலிட சன்னி - 13 தீரும்.

பேதியானந்த வயிரவன்

சாதிலிங்கம், நாபி, மிளகு, திப்பிலி, வெண்காரம் கெந்தகம் வகைக்கு விராகனிடை - 2 நேர்வாளம் விராகனிடை - 5 கடுகுரோகணி விராகனிடை - 3 கூட்டி எல்லாம் எலுமிச்சன் சார்விட்டு இரண்டு சாமமரைத்து வைத்து கொண்டு வாத சுரம், பித்த சுரம், படிம சுரம் இதுகளுக்கு இஞ்சி சாற்றிலாவது சுவாச காசத்துக்கு ஆடாதொடை சாற்றில் குடுக்கவும்
ஃ அ அதுமில்லாமல் ஆவாரை பூவை அரைத்து குளிகை வைத்து குடுக்கவும்.

குன்மத்துக்கு

ஏலம், கோஷ்டம், அதிமதுரம், கருஞ்சீரகம், நல்லசீரகம், தாளிசபத்திரி, கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, குரோசாணி ஓமம், அசமதாகம், கடுகு, காந்தம், காயம், அரிசி, சுக்கு, மிளகு, திப்பிலி, மஞ்சள் இவை எல்லாம் இளவறுப்பாக வறுத்து பொடி செய்து தேனில் கொள்ள வயிறு வலித்தால் உப்பு கஞ்சி குடிக்க குன்மமாம் வாய்வு தீரும்.

ஆ. வயிற்றில் சர்வ வாயாதிக்கும் திப்பிலி சூரணம்

திப்பிலி பலம் - ௨, சுக்கு பலம் - ௨, செவ்வியம் பலம் - ஹு, சித்திரமூலம் பலம் - ௨, வாயுவிளங்கம் பலம் - ஹு, காயம் பலம் - ௨, ஏலம் பலம் ஹு, இலவங்கம் பலம் - ஹு, கய்யாந்தகரை பொடி பலம் ஹு, லோகம் பலம் ஹு மற்றதெல்லாம் யிடை படிக்கொண்டு சூரணம் பண்ணி சர்க்கரை கூட்டி கொள்ள இருமல் வாயுவும் மந்தார சன்னி சகலரோகமும் தீரும்.

தின்ம வாய்வு கட்டி கரைய

வெள்ள வெங்காயம், சீரகம், அதிவிடையம், அக்கிரா காரம், அசமதாகம், காயம் இதை அருந்துப் பொடி பண்ணி தேனில் வெருகடி பிரமாணம் கொள்ள கட்டி கரையும்.

4.அ சூலை கட்டுக்கு

பரங்கிபட்டை பலம் - 3, மாறப்பன் கிழங்கு பலம் - 3, வெற்றிலை - 50, பசுவின் பால் படி - ஹு, அது பானையில் பாலை ஊற்றி அதின் மேலே சீலை நனைத்து வெடு கட்டி மேலே வெற்றிலை அடுக்கி சூரணத்தை பரப்பி அப்படி அடுக்கா பரப்பி மேலே சட்டி கொண்டு மூடி வெற்றிலையும் பட்டா பாசைந்து சாப்பிட இச்சா பத்தியம்.

—

கிராணி ஆனந்த வயிரவன்

நாவி, லிங்கம், திரிகடுகு சமானம் கட்டி (சமன் தட்டி) பழம் சாத்தில் அரைத்து உருண்டை செய்து இஞ்சி சாத்தில் இட சுரம் தீரும் பித்த சுரத்துக்கு துளசி பாலிலிட தீரும்.

ஆ. சுரம் ஆனந்த வயிரவன்

சாதிலிங்கம், நாபி, கெந்தகம் வெண்காரம் திரிகடுகு வகைக்கு வராகனெடை-1 நேர்வாளம் சுத்தி பண்ணினது-7 இவை எலுமிச்ச சாற்றில் இரண்டு சாமமரைத்து மிளகு பிரமாண உருண்டை செய்து நிழலுலர்த்தி இஞ்சி சாத்திலிட பயித்திய சுரம், சீதசுரம், பழைய சுரம், குளிர்சுரம்,(மும்) நிற்கும். சன்னி வாத சுரத்துக்கு தேனிலிட்டு மேல் இளைப்பு, இருமலுக்கு ஆடாதொடை சாத்திலிடவும் வயிறு கடுப்புக்கு ஆவாரை பூ சாத்தில் வெண்ணை -யிலிடவும்.

அக்கினிக் குமாரன்

5.அ

ரசம், வெண்காரம், நாவி, வெள்ளை பாசாணம், கெந்தகம், நேர்வாளம் ஆக வகை-6 இவை சமனாக தட்டி கையாந்தகரை சார் விட்டரைத்து 3 சாமம்

அரைத்து உளுந்து பிரமாணம் உருண்டை
செய்து நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு இந்த
சாற்றில் திப்பிலி கசாயத்தில் சுக்கு கசாயத்தில்
கொத்தமல்லி கசாயத்தில் ஆடாதொடை மட்டு
? ரசம் இதுகளில் ~~[illegible]~~ ஜீர பலம் அறிந்து வியாதி
குணம் அறிந்து ஒரு உருண்டையாக இப்படி
3-நாள் யாக தீரும் வியாதி:- வாதசுரம், பித்த
சுரம், சேத்தும சுரம், சன்னிசுரம், குன்றான
ஆ. மாறல், அதி(சீரண) சுரம், விஷசுரம், தோஷம்,
அஸ்திர வாதம் இவை எல்லாம் தீரும் பத்தியம்.

சுரம் - 64க்கு மாத்திரை

திரிகடுகு வேப்பிலைசாறு
பட்டரைத்து குன்றுமணி பிரமாணம் உருண்டை
பண்ணி வேப்பிலை சாற்றில் ஒரு உருண்டையாக
வெதுகொண்டால் நிறுத்தவும். சுரம் 64 தீரும்.

அயல்பட்டை சூரணம்

அயல்பட்டை, சாரணைவேர்,
சுக்கரட்டைவேர், சுக்கு, மிளகு, கடுகு,
வெள்ளுள்ளி, ஓமம் வகைக்கு பலம் - 1

6. அதிதுவெல்லாம் சூரணம் பண்ணி வெருக்கடி பிரமாணம் கொள்ள இதுக்கு தீரும் வாயாதி வாத குன்மம், வலிகுன்மம், பித்தகுன்மம், எரி குன்மம் மகாளகுன்மம் சத்திகுன்மம் சேத்தும குன்மம் வாந்திகுன்மம் சோகை குலுப்பை சிரம்பல் நீர்கோவை குடல் வாதம் சோகை தீரும்.

உப்பு சுண்ணம்

உப்பு ஒரு பங்கு பெரண்டைசாறு பங்கு கலந்து சட்டியிலிட்டு சீலைமண் செய்து புடம் போட்டு பற்பமாம் அடுப்பில் இரண்டு சாமம் எரிக்க பற்பமாம் நெய்யில் குடுக்க அஜீரண குன்மம் தீரும்.

புண்செட்டை கிரந்திக்கி

மாவிலிங்கம் இலை 7 அரைத்து வெந்நீரில் உள்ளுக்கு குடுக்க பத்தியம் பசுவின் பால் சோறும் அசனம் பண்ணவும் உப்பு புளி ஆகாது.

ஆ. ✗ ## கிரந்திக்கி

சாதிக்காய் - 10, கிராம்பு - 3, வெள்ளை வீராகண்டை - 1, திப்பிலி வீராகண்டை - 1, கண்டதிப்பிலி வீராகண்டை - 2, கசகசா வீராகண்டை 1 எடு,

வங்காள மஞ்சள் வீராகனெடை - 1 வீசு பரங்கி
பட்டை வீராகனெடை - 3 வீசு சிகப்பு, கோழிக்
கீரைபடி - 1 இதுவெல்லாம் பொடிசெய்து இலை
கூடப்போட்டு எலுமிச்சன் பழம் சாற்றில்
? அரைத்து திளத்து சுதல் கொண்டு அந்து அதை
எடுத்து காய போட்டு சரக்காக்கி இடித்து
அந்த தூள் பலம் - 2 பன்னீருப்பு (வெடியுப்பு) பலம் - 1 இது
இரண்டும் எலுமிச்ச பழம் சார் விட்டரைத்து
எடுக்க மெழுககாகும் இதைத்தால் கொண்ட
புண்கள் தீரும்.

7.அ பேதி மாத்திரை

நேர்வாளம் கொட்டை 20, கடுக்காய் 40,
சுக்கு 10 நேர்வாளத்தை சட்டியே காய வைத்து
வறுத்து கொட்டை வெடிக்கிற பதத்தில் எடுத்து
இது மூன்று வகையும் நின்பழம் (எலுமிச்சன் பழம்)
சாத்தில் அரைத்து சுண்டைகாய் பிரமாணம்
உருண்டை பண்ணி நிழலுலர்த்தி வைத்துகொண்டு
இளவென்னீரில் ஒரு உருண்டை குடுக்கவும்
பேதியாகும். சகல பேருக்கும் குழந்தைக்கு
குடுக்க தீரும்.

ஆ: ## ஆனந்த பைரவன்

சாதிலிங்கம், நாபி, மிளகு, திப்பிலி,
வெங்காரம் கொத்தமல்லி வகைக்கு வராகனிடை-2,
நேர்வாளம் வராகனிடை-5, கடுகுரோகணி
வராகனிடை-3 இதுவெல்லாம் கூட்டி எலுமிச்சன்
பழம் சார் விட்டு இரண்டு சாமமரைத்து
குன்றுமணியளவு உருண்டை பண்ணி உலர்த்து
சன்னி வாத சுரத்துக்கு இஞ்சி சாந்திலடவும்
சுவாசகாசங்களுக்கு ஆடாதொடை சாத்திலடவும்
சர்வவிஷங்களுக்கு அவுரி சாத்திலடவும்.

கணத்துக்கு

கோரோசனை, கோஷ்டகம்,
8.அ அதிமதுரம், திப்பிலி, தேவதாரம், சீரகம், கஸ்தூரி
மஞ்சள், கடுகுரோகணி, அரத்தை, சந்தனம், ஏலம்,
மாசிக்காய் (வெந்தயம்) சுக்கு வகைக்கு பலம் - 1
விளக்கெண்ணையால் எரித்து வைத்து கொண்டு
பிள்ளைகளுக்கு கொடுக்கவும்.

தோறாய் பழுங்கி வந்து

கொட்டை பாக்களவு சாந்தரைத்து அருங்கவசி
தவட்டில் கலந்து மூன்று வேளை கொடுக்க தாவம்
தீரும்.

நீர்சுருக்கு

ஆவாரைவேர், கலைகொம்பு
தேனும் பச்சை தேனால் குடிக்க தீரும்.

நீரடைப்புக்கு

10 கடுக்காயால் நீர் விட்டரைத்து
கூட கலந்து குடிக்க வயிறு ஆறும் நீர் ஊறும்.

ஆ. ## வெள்ளைக்கு

எலவன கொழுந்து கொண்டு வந்து
இடித்து சார் பிழிந்து 3-நாள் 1/4 படி சார் கொள்ள
நீர்க்கும் பத்தியம் கடினம்.

மாந்த சுரத்துக்கு

சீந்தில் தண்டு கடுக்காயும்
சிவதை வேரும் கந்தாளகாய் சுக்கு, ரோகணியும்
காய நீரால் கலந்திட்டு எந்திக்கது குழலையாள்பின்
நீரை எட்டொன்றாக்கி கொள்வீராய் மாந்தம்
போகும். வயிறு கசியும் வல்லான்மையாகும்
கண்டீரே.

9.அ. ## மேகம் 21க்கு

நெல்லிக்காய் சாறு படி - 1
சர்க்கரை பலம் - 25 கரைத்து அடுத்து கொள்ளை
வேர் பட்டை பலம் - 1 அரைத்து . . . காய

காசரி இதில் திப்பிலி கொடிவேலிவேர் கொத்த
மல்லி வெப்பாலை அரிசி, அதிமதுரம், ஏலம்,
ஓமம், சீரகம், மிளகு வகைக்கு பலம் - 1
கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்
வகைக்கு பலம் - 2 ஆடாதொடை படி - 1
இடித்து வஸ்திரகாயம் பண்ணி பாலில் கூழ்
நல்லெண்ணை படி - 4 கூட ஆட்டு கிண்டி
இறக்கி காலமே ஒரு நெல்லிக்காயளவு கொள்ள
பிரமேகம் 21, உடம்பு எரிப்பு, எலும்புருக்கி
இசுபாகம் போலே பெரும்பாடு எடுத்து
ஆ. வருகிறதும் தீரும் இதிலே ஆவாரை பஞ்சாகம்
கூட்டி கொள்ளவும் பத்தியம் கடினம்.

வண்டு கடிக்கு தயலம்

துளசிவேர், சங்கம்வேர், வாகை வேர், பாவட்டைவேர், அதிஞ்சிவேர், எருக்கம் வேர், காட்டு கோவைவேர், தகரைவேர், வேப்பம் வயிரம் கொடிவேலிவேர், சூரசன்வேர், நொச்சிவேர், குட்டிவாய்வேர் கூட்டி தயலம் இறக்கவும். காசளவு திட்டம் 40-நாள் தின்னவும். சிறாய்வண்டுகடி, பட்டை வண்டுகடி, செவ்வண்டு கடி, கருவண்டுகடி, சிலை வண்டுகடி சகலமும் தீரும்.

10:அ

மகோதரத்துக்கு

சீனாக்காரம், வெங்காரம், சவுக்காரம், நவாச்சாரம், படிகாரம், இந்துப்பு, பொட்டிலுப்பு சீயக்காய், கல்லுப்பு, கடுகுரோகணி, கடுக்காய், பெருங்காயம், சித்தரத்தை கொடிவேலி இது இடித்து சூரணம் பண்ணி வைத்து கொண்டு தும்மட்டிகாய் சாறுபடி -1 மாவலிங்கம் பட்டை சதுரகள்ளிபட்டை இது நறுக்கி சார் ஊறவைத்து பதத்தில் சூரணம் பண்ணி போட்டு விளக்கெண்ணை கொஞ்சம் விட்டு லேகியம் பதத்தில் இறக்கி தெளிஞ்சி கெச்சகாய் பிரமாணம் குடுக்கவும் பத்தியம் கடினம் உப்பு புளிப்பில்லாமல் மிளகுநீர் காச்சி சாதம் கொடுக்க பசுமோர் கூட வெந்நீர் கூட்டவும்.

பாண்டு ரோகம் செய்யும் குணம்

ஆ. இருக்கையால் யிளப்பு மூண்டாம்
நெஞ்சது யிடிது டிக்கும்
மருவாயே வயிறு தானும்
மந்தமே பத்தி நுக்கும்
வெந்து கிருகி நுந்து
மேனிகள் வெளுத்து வீங்கும்
மருவாயே பித்த பாண்டு
ரோகமென் றோரைக்க லாமே

இந்த கோளமெல்லாம் பார்த்து பித்த பாண்டு குணமென்று அறிவது இதுவன் சிலாகை:

கையாந்தகரைசாறு, காட்டுமல்லிகை சாறு, நீர்முள்ளியலைசாறு, பொடுதலைசாறு, அரியன் இலைசாறு, கோட்டா மணக்கு சாறு, மூசுமுசுக்கை
11.அ சாறு முடக்கொத்தான் சாறு, ஆடாதொடை சாறு, குப்பி சாறு, சிவாவரை சாறு, நொச்சிசாறு, வேலி பருத்திசாறு, எருமச்சன் சாறு, பிரமியிலை சாறு வகைக்கு படி-௨ கடைசரக்கு திப்பிலி, திப்பலி மூலம், செவியந், தேவதாரம், அசமதாகம், வாய் விளங்கம், கொத்தமல்லி, கடுகுரோகணி, அதிமதுரம், மிளகு, கோஷ்டம், அரத்தை, சீரகம், கடுக்காய், கிராம்பு, சாந்தம், கிட்டம் அரப்பொடி வெள்ளுள்ளி பேய்புடல் நெல்லி முள்ளி வகைக்கு பலம்-1 இடித்து அரைத்து அந்த சாற்றில் போட்டு லேகியம் பதமா கிண்டி லேகியம் கடுக்கிற சமயத்தில்-௩0 பலம் சர்க்கரை தேனும் கிண்டி இரண்டு
ஆ. நேரம்-15 நாள் பாக்களவு கொள்ள பாண்டு, ஊது பாண்டு, மஞ்சள் காமாலை, பித்த குன்மம், வாய்வு இதுகள் தீரும். பத்தியம் கடினம்.

—

புண்ணுக்கு

ரசம் பணவிடை ~~ச்சு~~ [வசம்பு] வீராகன் -1
வெள்ளை சாரணைவேர் நறுக்கி சார் ஆட்டு
தலை ஒரு ஒரு காசிடை [செ] அரைத்து வடித்து
கொண்டு எந்த புண்ணுக்கும் போடவும்
எரிந்தால் அனலில் காச்சு (காட்ட) தீரும்.

கோரோசனையும் நொச்சி வேரும்
பொடி செய்து வாயில் போட வாய்திறவாள்

கண்ணில் வரும் வியாதிக்கு

12.அ கடுக்காய், வசம்பு, கொட்டாரந்
திப்பிலி, மிளகு, மரமஞ்சள் சங்குபொடி
தான்றிக்காய் மனோசிலை வகைக்கு
வீரகனிடை -1 வெள்ளாட்டு பாலில் அரைத்து
கண்ணில் இட கசம் படலம் திமிர்தினவு நோ
மேல் தொளிப்பு மாசந் தீரும். அன்பத்துக்கு பூவாளல்
30 - நாள் போடவும்.

சர்வ வீக்கத்துக்கு கசாயம்

மாமாலைதண்டு, சீந்தில்
தண்டு, கோவைதண்டு, நன்னாரி, நொச்சி,
சிறுக்கீரை, நீர்முள்ளி, கண்டுபரங்கி, சுக்கு
சித்தரத்தை தாளிசபத்திரி ~~யித்து செய்ய தீரும்~~ +
+ ([இவைகளை] ~~இது~~ எல்லாம் [ஒன்றிரண்டாய்ப்] கசாயம் செய்து [ஒக்கா] குடிக்க தீரும்)

ஆ. ## வில்வவேர் தையலம்

சாந்தமாம் வில்வம்வேர் தையலம் கேளும்
தானான வில்வம்வேர் பலந்தான் பந்து
பாயந்தமாம் படித்தனை பதக்கு நீரில்
பருவாக காச்சியத்தே எட்டொன் றாக்கி
போயந்த எண்ணைநாழிவிட்டு புகடிக் கேளும்
புகடாதே சந்தனந்தான் அரைத்து போடு
புண்ணியனே படிதயெல்லாம் ஒன்றாய் உட்டி
புளிதைமாய் தணலில்விட்டு மெழுகாய்க் கொண்டு
வரணமா ஒருப்பதத்தில் வடித்து கேளும்
13·அ வாகாக முருக்கிவர அண்ணமை கேளே
விளைசயாய் முருக்கிவர சந்தம் போகும்
விரைசமற மேசுள்ள உதரம் போகும்
இளமைமாற வாக்கிரைக்கு மேகம் போகும்
பருகன்றும் நொம்பருநம் இருமல் போகும்
அளமைதனால் இரத்தபாத்தம் ஓடி போகும்
அளவரச்சி அளசரங்கள் ஓடி போகும்
தனமாக கிட்டபோபம் தயலம் சொன்ன
சம்பரமதாய் காயமடா தணிந்து போமே

எலி கடிக்கு

மாவலிங்கம் பட்டையை வெட்டி மேல் தோல் சீவி போட்டு ஒரு கொட்டை பாக்களவு நெய்யால் நல்லெண்ணை விட்டு குடிக்க தீரும். வெய்யில் ஆ. படாமலிருக்க இது கைகண்டது.

இந்த பட்டை தூளாக்கி பசும் பாலில் கொள்ள எலிகடி தீரும்.

சுக்கு கருஞ்சீரகம் வகைக்கு பலம்-5 இதை பொன்வறுலா வறுத்து கஷாயம் வைத்து கொள்ளவும் தீரும்.

க்ஷயத்துக்கு

ஒன்னரை வீசம்படி சாராயம் கொண்டு அந்து தேசாவரம் அரைத்து 3-நாள் கொள்ளவும். மேலுக்கு உளுமந்தை சார் பூசவும் பத்தியம்.

சருகுடன் பாடாத பெண்ணுக்கு

பொன்னாங்கு வராகனிடை - 1, கற்பூரம் வராகனிடை - 1 முள்ளிகத்திரிகாய் சார விட்டரைத்து தாழம்பூ காம்பு நீர்விட்டு அரைத்து
14.அ நல்லெண்ணெயால் மந்தித்து தலையில் தேய்க்க புஷ்பம் உடையதிருப்பாள்.

காமாலைக்கு மருந்து

சித்தாமணக்கு ~~[illegible]~~ இலை அரைத்து பசுவின் கோமயத்தில் குடிக்கவும் தீரும். பத்தியம் கடினமில்லை

5.2.92

சித்திர வல்லாதி ஆனந்த களிப்பு

அந்தி முனை துதித்து - நல்ல
அன்பான வல்லாதி இன்பமாய் சொல்வேன்
சித்திர மூலம் வெள்ளருகு - நல்ல
சிவனார் வேம்புடன் சங்கம்வேர் குப்பி
முத்தின தேங்காயின் எருந்து - நல்ல
மலமாம் கெருடன் அமுக்கிரா வேரும்
ஆ. அத்தில் முளைத்த வெள்ளருக்கும் - நல்ல
சதிரான செங்கதாரி குன்றிவேர் பட்டை
உச்சிதம் வெப்பாலை ஊத்து - நல்ல
உணர்வான காணகை கிரகமு தானும்
முத்தின ஆதவாள ஊடுசும் - நல்ல
முதலான வாத கரப்பான் பட்டை
சத்தி செந்தகமது தூருசு - நல்ல
சதிரான அதமுத்து தூத்தமு சேர்த்து
சித்திரமாக நிண்டு எடுத்து - நல்ல
சிறப்பான வகைக்கொரு பலமும் நிறுத்து
ஊல்தார மானபன வெல்லம் - நல்ல
ஊலங்கிய எல்லுவகைக்கி சேர் கொண்டு
15அ முத்தின இசல் கொட்டை நூறு - நல்ல
முதிரம் பாலகிபட்டை பலம்-2 கையாத்த
திறமாக யாமடித்த பின்

கரத்தாலே நோக்கி சின்திபம் கொடுத்து
சித்திர வல்லாதியென்று சொன்னி செப்பினார்
சீசருக்கு உபதேச மாக
பத்திரமாக எடுத்துமது பாண்டத்தில் வைத்து
நிறை பாக்களவு உண்ணடை
மண்டலம் யருபோது சொன்னார் -நல்ல
மார்க்கமாம் வியாதியே வகுத்துரைப் போமே
சித்தின இலை கிரந்தி -நல்ல
சிடக்கு கடப்பு பாடிப்பு திமிர்ப்பு
பத்தின மேகங்கள் வாதம் -நல்ல
பாங்கான யாதனா ஊர வெருப்பு
வத்தின உடம்பு கிரங்கு -நல்ல
ஆ. வகையான அழுவெட்டு கடிவாதம் முதலாய்
சத்தி திமந்த வெண்குட்டம் அண்டும்
சொல்லாமல் போகுமே வல்லாதி கண்டால்
போத்திக் கடிபோல வெடித்து -நல்ல
பனம்போல யுடம்பெல்லா வரம்புபா லாந்து
கொத்தி கிழிந்து போனே -நல்ல
குண்ணை பாதத்தில் கிறாய் வெடிந்து
அந்தி கிரந்தி னொண்ணாக்காய் சன்ற
ஆறாப் பரங்கியுன் அண்ணொயக் கெல்லாம்

சித்திர வல்லாதி கண்டால் - நல்ல
சிக்கென்ற பட்சபாக் கிண்டாப் போலே
பத்தியம் சொல்வேன் கேளும் - நல்ல
பாசிபயறு துவரபருப்பு மேலும் உளுந்து
முந்தினது கத்தரி பிஞ்சும் - நல்ல
16அ முருங்கையின் பிஞ்சும் அரைக்கீரை தானும்
சாதாவின் பாலுநெய் மோரு - நல்ல
சதிரான வெள்ளாடு வரால்மீன் குறவை
சித்திர ஆமணக் கெண்ணை - நல்ல
சிறான போது முருங்கவர என்னை

வல்லாதி முற்றும்.

ஆ. ## மகாவல்லாதிசெய்ய மருந்து

சொல்லுகிறேன் கேளப்பா மகா வல்லாதி
செகமெல்லா மெச்சுதடா யதுதா னப்பா
சினையுரைத்த வல்லாதிச் சொல்ல கேளு
கேளப்பா சாதிலிங்கம் பலம்(தான்) மூன்று
கெடியான அபுதாரம் பலம்தான் மூன்று
நேரான மனோசிலைதான் பலம்தான் மூன்று
சிறந்ததொரு நெருபாசாணம் பலம்தான் மூன்று
சித்துமுள்ள ரசம்நாவா சூதா னஞ்சு

பொரியன் வெண்காரம் பலம்தான் மூன்று
சுருக்கான காந்தமது பலம்தான் மூன்று
துரிசென்ன மருந்தொன்றுக்கு சத்திபதினஞ்சு வாங்கே
17.அ. வாங்கியே போகாமலின்னம் சரக்கு சொல்வேன்
கேளப்பா பரங்கிபட்டையடித்து சேர்தா னொன்று
சென்றதொரு எட்டிகொட்டை சேர்தா மூன்று
அருந்ததொரு நிரமுத்து சேர்தான் மூன்று
அரிதான சேங்கொட்டை சேர்தா னைந்து
வணருமுள்ளோ சாதிக்காய்கிராம்பு பலம்தான் மூன்று
இதமுள்ள வால்மிளகு பலம்தான் மூன்று
இருதமுள்ள கருஞ்சீரகம் பலம்தான் நாலு
புகழ்கின்ற தான்றிக்காய் சேர்தான் நான்கு
படர்ந்ததொரு செங்கதாளிபட்டையடித்து தான்சேர் தானொன்று
சிவசிவ சிவன்வேம்பு சாரியாய் தட்டே
ஆ. தட்டியே மருந்தெல்லாம் ஒன்றாய் சேர்த்து
ஆதியென்ற குருவைதான் மனதில் வைத்து
அரோகரா கல்லுரலில் ஆயத்தமந்திரம் யிடித்து வாங்கி
யிடித்தபின் நல்லெண்ணைரெண்டுபடி விட்டெரித்து வாங்கே
வாங்கியே பாக்களவு உருண்டை செய்து
நோய்களுக்கு யேந்தவல்லாதி உருண்டை ஒன்று
கொள்ளவே நோய்தீரச் சொல்ல கேளும்
கெடுதலுள்ள பதினெட்டு குட்டம் தீரும்

கிடக்கின்ற நிலைஅது பத்துநாளும் தீரும்
பறந்துதொடா மேகத்தில்பறந்த கடிவாசமுந் தீரும்
திரண்டஉடன் கிராணியாரு உளையும் போச்சு
18 அரைவகுநாளாய் நின்றதொரு கிரமம் போச்சு
சடத்தில் நீண்டான நடிப்பு போச்சு
உபாதொடி உந்தநோய் மேகமெல்லாம் போச்சு
காயங்களு ஞத்துதொடா தீங்க வேண்டாம்
கண்டதொரு மண்டலமே கொண்ட யானால்
அறாகறா மாந்துளிறது மேனி யாச்சு
சயபோகம் ஆகாது புளிப்பு ஆகாது
தன்னப்பா மாமிசத்தை புகையிலையும் தள்ளி
செகத்திலே வைத்தியர்கள் யன்றுங்கிட்டா தப்பா
பாடினேன் ஆயிரத்தி நூத்துக் குள்ளே
மகாவல்லாதி அருக்குதனை கொண்ணால் பாரும்

ஆ. ர கண் மருந்து

வானத்தின் பனிமவன் மாவிலை தன்னிலும்
? பெயணத்தின் கொம்புமயர் உளைவாண்ணாம் செரும்பும்
தனைசுதுகைநம்பு குருகசுந்தின் பன்றும்சோரா தீர்த்தி
முலைப்பபால் ஊட்டளரைத்து அன்னிலைட கொர
மாறுதொண்ணும் தாரும்நலமாகு பெருமென்றே

மந்தாரகாசம்

பொன் அரிதாரம் பலம்-4 தட்டி அரிதாரம் பலம்-4, நெர்ச்சிலை பலம்-4, சாதிலிங்கம் பலம்-2, மருதார சிங்கிரிராகண்டை 2 இதுகளை கலியாண பூசணிக்காய் சாத்தில்
19.அ. சருக்கு குருத்து மறுபடி சித்தட்டா சுத்திசெய்து அதின் மாக்கு நீர் ஊட்டு சுத்திசெய்து கைசபுடம் திகையாலட்ட பசுவெண்ணெயில் பணவிடை கொள்ள சர்வமதன மந்தார காசம் தீரும் னை கண்டது.

ரத்த பாரமயத்துக்கு

பிளியாரணைவேர், நன்னாரி வேர், பொன்னாங்காணிவேர், ஊளைதாமரை இலை பசும்பால் கலந்து சர்க்கரை போட்டு கொள்ளவும்.

அனுமந்த சிவம்

சுரம் இருகை ஆமதுந்தபி இருகை = சுரமனை இரு கையடது பாகம் பாரம் மாதும் வலது பாகம்
? ஊறகேவரும். அல்லலலா சூத மரைத மாரும்ம
தேவையில்லை ராச்த தசும்பாறா சங்கு சங்கு ஓம அச்சாட லாடெனா கட்டுவால் அனுமனத்தா = ஈஈஈஈஈஈஈ கல்கட்டு முக்கவைட்டு அஞ்சனாதேவா அனுமந் தாகாசிவாய நமவ யாதுக்கு சக்கரம்

நம்பனம் - 55 ஊகடமற 79 மோசனம் -101
வசியம் -115 லோக வசியம் -21
மாசாதக்ன -201, சுதங்கமுன -150

31·அ

கற்பூர மாத்திரை

கற்பூரம், ஏலம், சாதிக்காய், கிராம்பு மிளகு நன்றாய் பொடி செய்து தேன் விட்டரைத்து 21 உருண்டை செய்து குரட்டடக்க சிலேட்டும சன்னி தீரும்.

சங்காதி மாத்திரை

சங்கு சுட்ட நீறு பலம் - 1, மலாக்கா சந்தனம் பலம் - 1 இது ரண்டும் தண்ணீர் விட்டரைத்து கடலை பிரமாண உருண்டை பண்ணி வைத்து ஆ. கொண்டு கற்கண்டு சர்க்கரை சிரகம் உருண்டை செய்து 20 - நாள் இருக்க நீர்பிழிவு வெள்ளை நீரடைப்பு சதையடைப்பு சகல மேகமும் தீரும்.

வாயுக்கு உருண்டை

திரிகடுகு, நற்சீரகம், நாமரி கருகு இந்துப்பு பெருங்காயம் ஆக வகை - 6 வகைக்கு வராகனெடை - 1 கடுகுரோகணி வராகனெடை - 2 இது வெல்லாம் வறுத்து இடித்து எலுமிச்சம் சார் விட்டரைத்து தேத்தான் கொட்டை பிரமாணம் ரெண்டு வேளை கொள்ளவும்.

கட்டும் அங்காதி மாத்திரை

ரோசாணி ஓமம், சாதிக்காய், சாதிபத்திரி, அதிவிடையம், கிராம்பு சமனா ஆகுட்டி மேனிச்சாறு விட்டரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி உலர்த்திப் பொன் முசுட்டை வேர் கசாயத்தில் ஒரு உருண்டை குடுக்கவும். சகல கிரானி கழிச்சலும் தீரும்.

மேக வெட்டையானால் வெள்ளை விழுந்தால்.

அபின் மருந்து பொடி செய்து கோழி சிட்டை -1 வெள்ளை கருவால் மத்தித்து குடுக்கவும் மருந்துக்கு நேத்த ஒரு சாமமட்டும் தண்ணி தொடாமல் இருக்க பச்சாபத்தியம்.

வெள்ளைக்கு

சீரகம், ஏலம், பனங்கற்கண்டு வகைக்கி துட்டிடை -1 நல்லெண்ணை குழிப்பு ஆ. கோழிமுட்டை -1 வெள்ளைகருக் கூட்டி குடுக்க யிந்த-படி 5நாள் குடுக்க இச்சா பத்தியம் உப்பு புளிப்பு ஆகாது.

கலிக்க மாத்திரை

காயம், சாந்தாரம் கடிய வசம்பு பேய்பீர்க்கு சிறுதிப்பலி வெள்ளமிளகு சேர்த்து அரைத்து கண்ணில் விடவும்.

—

6.2.92

வெட்டை வெள்ளைக்கு சங்கு பற்பம்

சங்கு கொண்டு வந்து உடைத்து
எருமைச்சாண் பாலும் சாறாட்டு உரை வைத்து மறுபடி
எடுத்து கருவா எகு சிலையால் உப்பு அரைத்து தடவு
சங்குசிலை மண் செய்து ரெண்டு மூன்று குழிக்கொள்ள
புடம்புட பற்பமாம் இதை பசுவின் பாலில்
3ஐ அதிருக்க பத்தியம் 6-நாள் மறு பத்தியம் 15 நாள்
இதுக்கு தீரும் வியாதி! மேகவெட்டை, சலபாரமயம்,
ரத்த பாரமயம், உள்ளுக்கு நீர்கடுப்பு, ரத்தநீர்
நிறக்காரை எருவு புண்ணிருக்கறதும் தீரும் கைகண்டது.

கிரந்தி வகை குலை வகை அரையாப்பு

துலக்க கிரந்தி, கோணாக் கிரந்தி,
பத கிரந்தி, கடி ஆசை கிரந்தி, செங் கிரந்தி, கருவு
கிரந்தி, படு தாமரை கிரந்தி, கருகட்ட கிரந்தி,
வெண்குட்ட கிரந்தி, அளிகிரந்தி, பொளிகிரந்தி,
அணாக் கிரந்தி, கெர்ப கிரந்தி, கிடிமூல கிரந்தி, கள்ளி
ஆ: புண் கிரந்தி, லிங்க புத்து கிரந்தி, வெடி குளைல் கிரந்தி,
அரைதாற் கிரந்தி, அடை பதுத்திர கிரந்தி, நாசிஹளை
கிரந்தி, தேத்தாங்காய் கிரந்தி, தாமரைக்காய்
கிரந்தி, குட்ட கிரந்தி, சைமம் கிரந்தி, மண்டை
கிரந்தி, தொண்டைகிரந்தி, ஒடுகிரந்தி, எலிகிரந்தி
அத்திகாய் கிரந்தி, வாய்கிரந்தி குஜ கிரந்தி
ஆக கிரந்தி 32 வகை குளைக்க பெற வகை

34அ வாத குளிகை, பித்த குளிகை, பித்தசிலேசட்ட குளிகை
வெடி குளிகை, பாண குளிகை, மண்டை குளிகை, எரி குளிகை
கெர்ப குளிகை, சந்தி குளிகை வர குளிகை ஆக குளிகை
10. அரையாப்புக்கு பேர் வகை கோவைக்கா
அரையாப்பு, வாழைக்காய் அரையாப்பு,
ஆமை அரையாப்பு, நெரி அரையாப்பு, மிளை
அரையாப்பு ஆக அரையாப்பு - 5 கருங்குறுணை
அரிசி படி - ௨ தண்ணீர் நனைய ஊற வைத்து
பிறகு எடுத்து உரலிலே போட்டு இடிக்கும்
போது கோவை தண்டு சிறுக அரிந்து ஒரு பிடி
கூட போட்டு இடித்த பிறகு ரசம் வீராகனிடை -1/0
ஆ. கூட ஆட்டு 3-நாள் யடிக்கவும் நாலாநாள்
எடுத்து மதுசட்டியில் போட்டு .. மகாச்சனா
வைத்து எடுத்து கலசத்தில் வைத்துக் கொண்டு
இந்த வியாதிக்கெல்லாம் ஒரு வீராகனிடையாக
ஒரு நாளைக்கு மூன்று வேளையாக மேலால்
கொடுக்கவும். இப்படி 3-நாள் ஒன்பது வேளை
கொடுக்கவும். வாய் குளிகை கட்டினால் மருந்து
கொடுத்த 7-நாள் கருவேலம் பட்டை இடித்து
35அ பச்சை தண்ணீர் வார்த்து முழுககவும். இப்படி
நாலுநாளுக்கு ஒரு தரம் முழுகி வரவும்
பத்தியம் மோரும் சோறும் பச்சை தண்ணீர்

வெள்ளாட்டு உப்பு கண்டம் கலவக்கீரை சுண்டை
அத்தல் உப்பு, புளி, புகை, பாக்கு, வெத்திலை
எருமைச்சன் ஊறுகாய் நெல்லிக்காய் எ.ர் வெங்காயம்
மிளகு, மாங்காய், கீரைதண்டு கருவாடு மீன்
பசுவின் நெய் துவரைக்கூட்டுக் கொள்ளவும்
வயிறு கடுப்பு கண்டால் வெள்ளாட்டு கறையப்பு
ஆவாத்து தண்ணீர் குடித்து கீரியும் தின்னவும்
வயிறு கடுப்பு நிற்கும்.

மஞ்சாள் கருவேப்பிலை, கோவக்காய்
பாகல்காய், பூசணிக்காய் வாழைக்காய் யிலை, கடுகு
ஆ. வெந்தியம், சீரகம், சந்தனம் புவடையீ சேர்க்காது
45 நாளைக்கு ஆகாது கிரந்தி, குஷ்டம், அரையாப்பு
கொனவாயாதி கருத்து வாயாதி இதுவெல்லாம் தீரும்

உ காட்ட மணக்கு கிழங்கு ஒரு பாக்களவு
தின்ன 3-நாள் பாக்குடனே தின்ன கரைந்து போகும்

ரசபற்பம்

ரசம் பலம் -2 உப்புப்படி -2

புது சட்டியால் கொட்டி செங்கல் தூள் மேல் கொட்டி
கோழி முட்டை கருவால் மேலே அரைத்து குகை
செய்து காயவைத்து அதிலே ரசம் வாட்டு முடித்து
36. அபாரமானதும் துவாரம் செய்து இதில் வைத்து மேல்சட்டிக்
கொண்டு மூடி சீலை மண் செய்து அடுப்பு மொழுகு
தீபதாபம் குடுத்து கோழி அறுத்து கனிவதி முன்பாக
அடுப்பால் வைத்து ஒரு வாரகா எரிக்க நாழிகை -30
எரிக்க எடுத்து மேல் சட்டியால் பத்தின குரணத்தை
சுரண்டி கொள்ளவும்.

மேகவெட்டை வெள்ளைக்கு

செம்பருத்தியிலை பொடி பருங்கி
வந்து நிச்ச தண்ணீரால் பிசைந்து அரைமண்டலம்
சாப்பிடவும். இச்சா பத்தியம்.

ஆ. ## புண்ணு களப்பு

வெப்பன் பட்டை பலம்-1, மிளகு
பலம் - அரை நல்லெண்ணை படி - 3 பிளாஸ்திரி
செய்து போடவும் தீரும்.

பிள்ளைகள் மாந்தஎண்ணை

பெருந்துமட்டிக்காய் சீவ பருப்பு
அரிந்து இலக்கெண்ணையில் போட்டு வெங்காயம்
போட்டு கருஞ்சீரகம் பலம் .., ஏலம் பலம் 3
பொடி பண்ணி எண்ணையில் போட்டு 3-நாள்
வெய்யிலிலே வைத்து மறுநாள் எரித்து எண்ணை
யெடுத்து கொண்டு 3 உரு துட்டெடை கொடுக்கவும்
மாந்தம் போகும்.

குன்மம் எட்டுக்கும் ரவளசெந்தூரம்

ஆடுதின்னாப்பாளை, வேலி
37:அ பருத்தி, குப்பமேனியிலை இது மூன்று சமனாக
நிறுத்து கொண்டு இடித்து சார் பிழிந்து தேவையான
கல்லுப்பு எடுத்து இந்த சார் ஊட்டணரைத்து இல்லை

செய்து காயவைத்து இடித்திட்டு ஒரு நூடி தினை
மன் செய்து அஞ்செருவான் புடம் போட்டு இப்படி
மூன்று புடம் போடவும் தேனில் நெய்யால் குடுக்கவும்
குன்மம் எட்டும் தீரும்.

குன்றதோர் பொரசம்பாரை வேப்ப யீர்க்கு
முப்பாரண்டை இமம்பகை சமனா தாக்கி
சித்தியாதை யருநாசி தண்ணீர் விட்டு
கொகுநீர் காச்சியாதை பாகல்நிரும் மக்க
ஆ. பத்திநின்றாக் கிருமியெல்லாம் கும்பட்டு உண்பாக
பயந்ததவாக்கும் பரபரப்பு தினவு நீங்கி
சுத்தமுமாம் குண்டில் ஜுனைத்த வரும்
சொன்ன நித்துனைகயான தொகுரு மாமே

சீதளசுரத்துக்கு

வெள்ளை பாசாணம் சுத்தி பண்ணி
மயில் துத்தமும் கூட சேர்த்து உளமத்தின் சாறு
விட்டரைத்து பயறளவு உருண்டை பண்ணி
சர்க்கரையில் கொள்ள பத்தியம் சீதளசுரம் போகும்.

(ஓலையெண் 38, 39, 40 41 ஆகிய நான்கு ஓலைகள்
காணவில்லை.)

42அ

சிறுத்திக்கி எண்ணெய்

ஆவாரையிலையால் சுத்து வேக
வைத்து காயவிட்டு தண்ணியில் ஊற்றி பசும்பால்
வார்த்து எண்ணெய் எரிக்கவும் சுந்தகுடு, மேகம்
எல்லாம் தீரும்.

உ துவாசத்துக்கு

தூதுவளை பட்டை பலம் - 1 சுக்கு பலம் - 1 கசாயம் வைத்து கற்கண்டு போட்டு குடிக்கவும்.

தூதுவளை பழம், அக்கல்காரம் அரிசிதிப்பிலி தூள் ஒரு தூள் பாணி தேனில் கொள்ளவும்.

ஆ. வெங்காரம் பொரியும் தாளகமும் குகைக்குள் ஊட்டு புடம் செய்ய பற்பமாம்

ஆடாதொடை, நுணக்காச்சுக்கு பட்டை தூதுவளை பட்டை முசுமுசுக்கை வேர் பட்டை தேனால் நெய்லேக்கியம் ஆத்துகொள்ள ஊறல் கற்கண்டு படுக்கும் போது 3 = அ 2 ள-அ இது சொல்வது குளிகை அரைக்கும் போது சொல்வது நம நம சிவ சிவ = ஹ்ரீங் ஸ்ரீங் காரா = ஓங்கார நமசிவாயா நமா இது சொல்வது ஓங்கி ஸிங்கி வருவாயா நமா அகத்தியர் சாபம் நிவாரணையா சுவாகா அகத்தியர் சாபம் நிவாரணையாக.

ஊழநாறு சக்கர குளிகை

43 ஆ. அதிறாந்து தாரமலாங்கம் ஆனசத்தி நாசமும்
சோதிமூல பற்பகுமதறுக்கி காந்தம் மனோசிலை
நீதிநின்றபடி சாத்தரை நெருங்குகின்டி நேடியோர்
சித்திரியா யருந்தபாறாற தாரசக்கரத்தின் மேற்பனி
தணித்திரு கருகுடன் மிக்கதேறுயங்கி நின்றாட்டு
நிரைத்திடு பக்கவாய்வு ஊக்கல்சத்தி பத்துமொன்று
சன்னிய மாரக்காய்ச்சல் நீக்கவாகும் மிக்கவாய்வு
அகற்றுமே

ஆ. அமிர்தாதி குளிகை

அருளினால் அமிர்தமெனும் குளிகைதனை சொல்லக்கேளு
அதிமதுரம் செண்பகப்பூ லவங்க மோடு
திருபருத்த கோரோசனை சாத்திர பேதி
சேர்ந்த வெட்டிவேர் கோஷ்டம் மாசிப்பச்சை
தருவான் ஜாலாமச்சன் வேலும் கூட்டி
சமமெனாய் ஜாந்துண்டி சாறுவிட்டு ஆட்டி
குளியதனால் சிலைப்பால் தன்னால்பனைத்து வரும்
திணமாந்தம் வாய்நீர் ஆறல்லிட்டும் தீரும்

சாம்பிராணி தைலம்

சாம்பிராணி பலம்-2 கொண்டு
வந்து சட்டியில் நடுவில் சாணம் வைத்து சுத்தி
44.அப்ர பொடியை ஆட்டு சீலை மண் செய்து மேல்
சட்டியில் தண்ணீர் ஊட்டு அடுப்பில் எரிக்க
இந்த தண்ணீர் சுட பார்த்து பதம் இறக்கி பார்க்க
கீழ்சட்டியில் தண்ணியும் தைலமும் இருக்கும் 3
வேளைக்கு குடிக்க சன்னி 13 தீரும்.

சாம்பிராணி பற்பம்

சாம்பிராணிதூள் நடு சட்டியில்
போட்டு சீலை மண் செய்து எரிய ஊட்டு எடுத்து
பார்க்க பற்பமாம். மேல் சட்டியில் இருக்கும்
சரண்டி எடுக்கணும் தேனில் கொள்ள சன்னி-13.
தீரும்.

ஆ. ## அகபேதிக்கி

சுக்கு பலம் -1, கடுக்காய் பலம் -2, காசுக்கட்டி பலம் -1, இந்துப்பு பலம் -1 கசாயம் பஞ்சரகுளிகை மகத்துக்கு உஷ்ணம் தீரும். கற்பூரம் ஜீரகணமடை -2, சுக்கு, மிளகு, திப்பிலி, பரங்கிபட்டை, குரோசாணி, ஓமம், நல்லசீரகம், தேன், நாட்டு சர்க்கரை, நிலப்பனை கிழங்கு இதுவெல்லாம் வஸ்திரகாயம் பண்ணி தேன் விட்டு அரைக்க கம்பா போலாகும் தேத்தான் கொட்டை மாரமானம் கொள்ளவும். உஷ்ண மேகம், பாடி வாதம், வலி, ஆதக வாய்வு தீரும்.

45.அ ## சுரம் 64-க்கு மாத்திரை

அத்திமுக வாகனத்தின் சுத்தருவை சேர்ந்து
ஆனைமேல் வருவானும் தேனும் கூட்டி
நித்தியோர் மாயிபாடை கிடையே சேர்த்து
நந்தகோப் பாலன்தன் சாற்றா லாட்டி
பத்தியாய் பயறளவாய் சாத்திரஉண்டை சேர்த்து
பாங்குடனே சுரசன்னி தயாள் லிய
உத்தமமே யந்திடவேவாச சுரங்கள் போகும்
உத்தமனே அடியாரும் உத்து பாரே

~~அரு. ஆ.~~

X சண்டமாருத செந்தூரம்

ஆ.

பருதியும் தாரை மதிதிருப்
பாகடல் சுழுபுரதா நுலகில்
பெருகியே மானடறகு வந்த
நோக்கும் நயாதி யுந்தான்
மகிந்து அருந்துகுரு முனிவோர்
மன்தினமையுடன் மாணவர்த்தன் மாறகேடு
திருந்திய தோர் அவுஷதம்
சண்ட மாருதம் மென்றந்த
செந்தூரம் சொன்னார் ஜீவர்களுக்கு
வெகுதொல்லை தாகவே சரக்கு
சின்னான சீலைக்கார் நசில்
சித்ரன பட்டை இடுராம்வகையு
தன்னால் அரையாமல் தாக்கிட்
வெய்யலல் காயாமல் தானாய்
ஓட்டில் வைத்து அவுசந்த
வாய்சிலை மன்சை ————

———— (அடுது சீலையான் கோணவில்லை)

7.2.92

கெந்தக சூரணம்

47அ

சுத்தி பண்ணின கெந்தகம் பலம்-1,

சுக்கு பலம் -1, தான்றிக்காய் பலம் -1, நெல்லிமுள்ளி பலம் -1, கடுக்காய் பலம் -3, பச்சைகடலை பலம்-1, சர்க்கரை பலம் - 20 வஸ்திரகாயம் பண்ணி நெய்யில் தேனில் கொள்ள பத்தியம் தயிர், நெய், பருப்பு, ஆட்டுகறி கூட்டி கொள்ளவும் உப்பு வறுப்பு மேகம், கருமேகம், செமமேகம், சிரங்கு, குஷ்ட சன்னி சேதல் கொண்டு தீரும்

ஆ. வாதராச்சததைலம்

அலக்கியென ஙைங்கொய் சாறு நாழி

அதின்நடுவே கெம்பார படிசாறு நாழி

இலுப்பை வெள்ளுள்ளி தன்சாறு நாழி

கொடிவேலி வெண்ணொச்சி சாறு நாழி

சலம்மிகவே காச்சியதை தனலெண் ராக்கி

48அ சாதிக்காய் காயமது இந்தம் கூட்டி

நலமுடைய கெந்தியுடன் இந்துப்பு சேர்த்து

நாயகருக்கு மோதகமும் அருகு கேளினே

கொல்லுவது மலைமஞ்சள் திக்கி ஆலம்
    தினமாக சுத்திபண்ணி தட்டி கொள்ளும்
உள்ளபடி படிம்புளிபோல் பதமே யாக்கி
    தூதுவளை படிம்போல பதமே உண்ண
உள்ளபடி தின்மமெட்டு தினை ஆதும்
    உதிரமோடு பெருவயாறும் ஓடும் தானே
ஓடுமடா உஷ்ணமுடன் உடலில் வாதம்
    ஒருகோடி குதங்கள் உதிர்ந்து போகும்
ஆ. போகுமே பத்தியமது பகர கேளும்
    உச்சிதமா பாலமரிந்து சதலம் சேரும்
இந்தபடி மண்டலந்தான் ஆன போது
    உரத்துதொடா காயமது ஓங்கும் பாரு

ஓமம் பலம் - 3 நந்தை சுண்டி இது ரெண்டும் அரைத்து எருமை தயிரில் கொள்ள பத்தியம் பதமறிந்து மண்டலம் கொள்ளவும் இது சைக்கிந்து.

ரசமெழுகு

ரசம் வராகனிடை - 2, கெந்தகம் வராகனிடை - 4, நேர்வாளம் வராகனிடை - 5, காட்ட மணக்கு வராகனிடை - 2, சித்தாமணக்கு விரை 3 இது வெல்லாம் தேங்காய் பால்

மட்டமரத்து முத்தின தேங்காய் திருவ போட்டு
49. அதில் அடைத்து எழு நாள் வைத்து அடைத்து
அரைத்து வெங்கல பாத்திரத்தில் இட்டு வெய்யிலுக்
கெதிராக காச்சி வைக்க தயிலம் ஆகும். அந்த
தயிலத்தை கொண்டு பூசினால் தடவ சுக்கர பேதி
யாம் நாவால் தடவ பேதியாம்.

நாமப்பா என்னபடி முக்கால் வாங்கி
நலமான சின்னிசார் இந்தல் சாரே
காறான செருப்படைசார் நொச்சி சாறு
சிமல்தான இலந்தநாயகன் பூண்டு சாறும்
மாறான சங்கம்சார் சாட்டரணையன் சாறு
ஆ. உளமான வெள்ளறுகு சாறும் கூட்டி
நாறான யாதுவெல்லாம் கூட்டி சேரும்
நலமாக உளைக்கிபடி கால்தான் கூட்டு
ஆறான சற்குருவைச் சொல்ல கேளும்
அப்பனே சிரகந்தான் ஒன்று கூட்டு
கூட்டடா கடுகு ரோகணியும் கூட்டு
கூறான பாதகரப்பான் பட்டை கூட்டு
வாட்டடா கண்டங் கத்திரியும் —
உளமான அன்னபேதி பூண்டு கூட்டு
காட்டவே பாடக அரத்தை சுக்கு
களமான பரங்கிச்சக்கை குளமான வேரும்,

நாட்டமே யாதுவெல்லாம் தூளாய் பண்ணி
நலமான வகைக்கு அரைபலமும் சேர
50. சேரடா எண்ணைதனில் கலக்கி கொண்டு
சிறப்பான நேர்வாளம் பலமாரதான்பொடித்து போடு
வாட்டடா நீர்சுண்ட காச்சிக் கொண்டு
வளமாக கரண்டிதிரை நாற்பதுநாள் கொள்ளு
சொல்லடா பத்தியந்தான் மிச்சா பத்தியம்
நலமாக கொண்டோட தீருநோ யங்கே
கேளப்பா வாக்குடன் சொல்லி விட்டான்
கிளியான வக்கு லேட்டும கரப்பான்
வாளப்பா பாத்தத்தால் எழுந்தபடை சிரப்பன்
வளமான செங்கரப்பான் சொறி கிரப்பான்
ஆளப்பா லிங்கபத்து யோனி புத்து
ஆ. அய்யனே கிரந்திவலி கோரக்காய் புண்ணு
நாளப்பா பாத்தத்தால் எழுந்த தெல்லாம்
நலமான வெடிகிரந்தி யாதுவெல்லாம் போமே

திருத்தி எண்ணை

வெங்காயம் படிசார், எலுமிச்சன்
பழம்சார் படி-வ ஆவின்பால்படி-வ
பசுமுன்னைசார் படி-வ மணத்தக்காளி
சார்படி-வ குமரிச்சார்படி-வ இளநீர்படி-வ

கொத்தமல்லி பலம் - 1, சீரகம் பலம் - 1, மிளகு பலம் - 1
சாதிக்காய் பலம் - 1 பனங்கற்கண்டு பலம் - 1
சுக்கு பலம் - 1 இலுப்பெண்ணெய் படி - 1 மெழுகு
பதம் இச்சா பத்தியம் கை கண்டது.

51.அ கத்தாழை சோற்றில் கடுக்காய்த்தூள்
போட கண்ணியாம் இப்படி செய்து சூட்டுக்கு
கொடுக்கவும் இச்சா பத்தியம்.

நாடி பார்க்க சொல்வது.

சித்திரை வைகாசிக்கும் செங்கதிர் உதயம் தன்னில்
உத்தமோர் ஆனிக்கும் — ஐப்பசி கார்த்திகைக்கும்
மத்தியானத்தில் பார்க்க மார்கழி தைமாசிக்கும்
இத்தகன் கதிரோன் மேற்கே ஆகின்ற நேரந் தானே
ஆ. தானது பங்குனிக்கும் தானது துலாவணிக்கும்
ஊனமா புரட்டாசிக்கும் அர்த்த ராத்திரியில் பார்க்க
தோன்றும் நாடி மூன்றும் தெளியவே காணும் என்று
கானமா முனிவர் சொன்னார் கைமுறை வைத்த நூலே

—

அகத்தியர் குழம்பு

பெருங்காயம், கடுகு, இந்துப்பு ரசம், பொரிகாரம், மனோசிலை, திப்லி, அரிதாரம், கடுகுரோகணி, கருஞ்சீரகம், வாலம், பச்சை வாலம் இது குழம்பு செய்யறது.

52. அ. சாம்பிராணி தயலம் இதின் பற்பம் சாம்பிராணி 1/2 படி தூள் கொண்டு சட்டியால் நடுப்புரம் வைத்து சாணம் வைத்து அதின் மேலே கின்னம் வைத்து யந்த தூள் சுத்தி போட்டு சீலை மண் வைத்து செய்து புடம்பட தயலமாம் இந்த தூள் சட்டியால் போட்டு சீலை மண் செய்து புட மட்டு மேல் சட்டி வரும் பற்பமாம். சின்னக்கி பிரமாணம் சன்னி சுரத்துக்கு கொடுப மாந்தே: வெள்ளை பாசாணம், அரம், மிளகு கோசுதும்பை சார் ஆட்ட அரைத்து மிளகு

ஆ. பிரமாணம் உருண்டை செய்து கொள்ள தேன் அனுபானம் சன்னி சுரம் போகும்.

திப்பலி வாலம் பெருங்காயம் கடுகுரோகணி துளசிசார் குசுகுசுக்கை சார் பாகைசார் அரைத்து உருண்டை செய்து நல்ல தண்ணீரில் கொள்ள மாந்தம் போம் பத்தியம்.

பிரசாசிக்கி திருனீர் மடிக்க

ஓம்காளபச்சி = கிலிங்காலி = காளபொந்து = கொதிபச்சி = கொதிக்காபொந்து = குட்சாபாளைச்சேர் அருஅ உ 27 கடிப்பு தகைக்க தண்ணீ துடராதுல

53. ஸ்ரீலங்குசபால சாதுறாளா பகவத்தே நாணிதாணி பயட்டு பயாட்டு யாந்து யாந்து தொளபந்து = காலபந்து = நாங்காலபந்து = ஆளங்காற காளி = றியும் நவதிராயா இதை சொல்லி காளக்க தண்ணீர் துடராது.

மேகத்தெண்ணை

புண்மேகம், சொறிமேகம், படர்மேகம், காளமேகம் இதுகளுக்குமேல் தூப எண்ணை :-

பிறாமமறாக்காசி சார்படி -1 நல்லெண்ணைபடி -1 இதில் கஸ்தூரி மஞ்சள் நார்போகாசி அரைத்து இறக்கிற பதத்தில் போட்டு காச்சி வடித்து உடம்பெல்லாம் தேய்த்து ஆ.யாட்டு சீயக்காய் அரைத்து தேய்த்து குளிக்க மோரும் சாதமும் சாப்பாடஅம். மேல்கொண்ட மேகம், சிரங்கு, கரப்பான் முதலானதும் தீரும்.

~~[illegible]~~

மேகச்சூடு தணிய

உள்ளுக்கு குடுக்க ஆலக்கொன்னையில் இந்த சாரம் ஆட்டு எருந்து குடுக்கபட்டு மட்டா கொடுக்க தயிர், நெய் மோர் சேர்த்து கொள்ள மேகம் தீரும்.

கலியாண பூசணிக்காய் கொண்டு வந்து சோறு எடுத்து அதில் சிறுவழுதுங்கபட்டை இது தூள் செய்து ஆக்கி கசகசா பனைவெல்லம் கடைந்து உப்பு போடாமல் சாப்பிட மேக வாய்வு சூடுந்தணியும். கை கண்டது.

54அ. . . . . . கார்க்க ஒரு புசன் நொண்டிதில்லையோ அவ்வுளல் ளாணருந்தன் அல்லவோ ஒவ்வு பெருகுவதும் ஆனே பொருகுவதும் வம்பே வருகிவதும் தானே வரும். இஷ்டமுடன்என் தலையில் பின்னபடி எழுதி ஆட்டிருத்த.. ஆட்ட சிவன் -சை... தானோ முட்ட சிட்ட பஞ்சாமயா மாகல் பாரம் அவன் தலைமேல் நெஞ்சமே நிங்காதிரு -

நெருஞ்சம்பருத்தியாள குந்து பறிச்சு வந்து நிச்ச தண்ணீரில் கசக்கி ஒரு மண்டலம் கொள்ளும் இச்சா பத்தியம் மேக சூடு மூத்திர சூடு தணியும்.

—

 13.2.92

ஆ. <u>பல்லி விழுந்தால் சாஸ்திரம் பார்க்க</u>

சிரசின் மேல் விழுந்தால் மனக்லேசம்,
நெற்றியின் மேல் விழுந்தால் பதர்காசி, தோஷம்,
புருவத்து மேல் விழுந்தால் செழுகம் போவான்,
மூக்கு மேல் விழுந்தால் சரீரத்துக்கு நோய் ரோகம்,
மொகட்டை மேல் விழுந்தால் ராசபயமுண்டு,
வலது காதின் மேல் விழுந்தால் ஆயுசு விருத்தியடையும்
இடது காதின் மேல் விழுந்தால் தான்யம் வந்தடையும்
உதட்டின் மேல் விழுந்தால் தனம் நஷ்டமகிலேசம்
55.ஆ. வலது தோளின் மேல் விழுந்தால் சொந்த வல்திரம் வரும்,
இடது தோளின் மேல் விழுந்தால் ராசபயமுண்
டாகும். மணிகட்டு சந்துகளில் விழுந்தால்
புத்திர ~~சூ~~ பாசம் அரும் தொண்டை மேல் விழுந்தால்
நற்வாகனம் ஏறவசம் வலது கால் மேல்
விழுந்தால் ஊரு பயணம், இடது கால் மேல்
விழுந்தால் -மனை கு?... வருத்தமுண்டு. முதுகில்
விழுந்தால் மனகிலேசமுண்டு மார்பு மேல்
விழுந்தால் சுகபோகமுண்டு.. பல்லி விழுந்தவுடன்
ஸ்நானம் பண்ணி சிவாலயத்தில் நெய்
விளக்கேற்றி வைக்க பலா பலன் வருமமென்று
சொல்லுவதும் உண்டு

—

ஆ. ## மேகத்து எண்ணை

பெருங்காயம், ஏலம் பலம் - 8,
லவங்கம் பலம் - 11, லவங்கபட்டை பலம் - 12
சாதிக்காய் பலம் - 1 எலுமிச்சன் பழம் சார் பலம் 4,
வெந்தயம் பலம் - 10 வருத்தகுத்து படி எண்ணை
வல்லாரி சார் பலம் 1., முசுமுசுக்கை சார் பலம் - 1
பொடுதலை சார் பலம் - 1 கத்தாழை சார் பலம் - 1
மணத்தக்காளி சார் பலம் - 1 கரிசலான்கண்ணி
சார் பலம் - 2 இளநீர், கற்கண்டு இது சமானம்
செய்து பதத்தில் வடித்து எடுத்து சூடுகள் மேகம்
இதுகள் கொள்ளவும். இச்சா பத்தியம்.

59.அ ## பேய்நாய்கடி பேய்நரிகடிக்கு

புலிதோல் சுட்டு கொண்டு
வந்து வெல்லகு மஞ்சளும் உமத்தையிலை சார்
விட்டரைத்து பன்னை காயியளவு குடுக்கவும்
20 பானை தண்ணீர் தலையில் ஊடவும் இக்கடியும்
தீரும்.
ஆண்நாயும் பெண்நாயும் கடிச்சபடி பாசிற்
நாச்சியாரும் நாய்களும் யாதந்தபடி பாசிற்
? குதிகுதி சுவாமியோ ராங்கே குதிச வாகா
கடிச்சயுடனே கடிச்சவாய்க்கு செம்பு நகடு
வத்துதட்டு காலியாவதும் வத்துகட்டவும் தீரும்

ஆ. பெரும்பாடுக்கு மருந்து

கத்திரிகாய்க் கொண்டு வந்து குடல்
ஊரை டெ.ஃலாடம் வாங்கி போட்டு அதுக்குள்ளே
தேங்காய் திருகி அது மேலே சீரகம், மிளகு
வறுத்து வேக போட்டு தின்னவும் குணமாகும்.

சூட வாளைக்கு

ஆகாச கெருடன் கிழங்கு கொண்டு
வந்து பெருங்காயமும் வசம்பும் கொண்டு வந்து
தண்ணீர் விட்டு அரைத்து வீக்கத்தில் பூசவும்
தீரும்.
செம்பொத்து எருமச்சரம் சார்த்துடன்
மசைந்து யாட கோமதி சாகும்.

௬௦.அ நேத்திர வாய்வுக்கு மருந்து

வெள்ளெருக்கன் பால் கிளையால்
எழுதரம் மடிச்சு காயவைத்து வத்தின பிறகு
எருமை நெய்யால் தோய்த்து வத்தி பண்ணி
விளக்கேற்றி புது ஓடு கவிழ்த்தால் மையாகும்.
அந்த மையை எடுத்து கண்ணில் நேத்திர வாய்வு
தண்ணீர் வடிவது நிற்கும்.

—

கிராணிக்கு மருந்து

கொடாசாலைதாமூலம் கொண்டு
அந்து தண்ணீர் வார்த்தரைத்து எண்ணையால்
குழைத்து கீழ் மேலும் வெண்ணை தடவி முழுகவும்.
மோர் குடிக்கவும் தயிர் வார்த்து உண்ணவும்.

ஆ. ✗ ஆவாரம்வேர் பட்டை கொண்டு
அந்து கடிநீர் வார்த்தரைத்து தப்ப குடிம்பாய்
அதுக்கு மந்திரம் சொல்ல குடுக்கவும் கிராணி
கழிச்சல் நிற்கும்.

நாமந் .... பகவத்தி புவனை பரா வேப்லேகி
அவதாரி குட்சதா, அவதாரி குட்சதீத சகிட மகேர்
கிளி ஹாகாரணி சரஸ்வதி அல்லிதம் பணி கிளி
கிளி சுவாகா இந்தபடி 3 தடவை சொல்ல
குடுக்கவும்.

61.அ

நீரடைப்புக்கு மருந்து

தண்டு சிவந்த நாயுருவியும்
சிவந்த சிறுக்கீரையும் பசுவின் பாலுடனே குடுக்கவும்.

✗ கொல்லையே சருமூலம் கொண்டு
அந்த அரைத்து 3 நாள் குடுக்கவும்.

வாழை வெட்டி போட்டு அடிதண்ணீர்
கொண்டு அந்த ~~[illegible]~~ குருவ அரிசியும் பழம்
புண்ணாக்கும் பொன்னாங்கண்ணியும் கொண்டு
அந்து பட்டாக பண்ணி பசுநெய் வார்த்து பிசைந்து
தின்னவும். தீரும்

ஆறா கருப்புக்கு மருந்து

எருமை தயிரால் காவேலாம்
பட்டை நாக்கி பாசைந்து குடிக்கவும் குணமாகும்.

ஆ. ஆணை வணங்கி வேர் கொண்டு
வந்து தூளாக்கி காற்று வாக்கிலே பிடிக்கவும்
தூக்கம் வரும்.

உயாறு இரும்பலுக்கு

வெள்ளரிவிதையும் ஏலாசுக்கையும்
அரைத்து தீர் உயத்தில் தடவ குணமாகும்.

→ சதிரகள்ளி காப்பு கட்டுகிறதுக்கு
திங்கள் கிழமை நாள் காப்பு கட்டி செவ்வாய்
கிழமை நாள் தூபம் கொடுத்து அந்த சதிரகள்ளி
வேர் பிடுங்கி அந்து நாசி பட்டை பொடியாக்கி
இரு விரல் பிரமாணம் வெள்ளாட்டு நெய்யால்
குழைத்து குடுங்க யிலை, யாருமல் தீரும். 7
நாளையால் தீரும்.

கண்ட மாலைக்கு

62அ

முத்தில சாட்டரணை கிழங்கு
சீமலமும் அரைத்து அடையாக தட்டி ஓட்டில்
காய வைத்து ஏரம் உலர்ந்த பிறகு சிலந்தி மேலே
போட்டு அதின் மேலே சிந்தியாலை போட்டு
கட்ட தீரும்.

அயிற்று வாய்வுருதி கட்டிக்கு

நிலைகடம்பல் கொண்டு வந்து இள வெந்நீரால் அரைத்து குடுக்க உடைந்து திகு கட்டியா வாகும். இதுக்கு பத்தியம் கோச்சு புளியாகாது.

ஆ வெகு அயிற்றுக்கு மருந்து

யாநாபதி தண்ணி மஞ்சளும் யாநாபதி கடுக்காயும் யத்தொன்றும் காயவைத்து வஸ்திர காயம் பண்ணி சட்டு நாளைக்கு குடுக்க தீரும்.

பூபட்டகண்ணுக்கு மருந்து

திருபுல்லடியும் சுளைப்பாலல் அரைத்து தலைக்கு வார்க்கவும். கண்ணல் போடவும் இதுக்கு மந்திரம் :. கருவசுடி பண்ணை புவனை பெருவலய மொட்டு அவரும் பாரந்தன் ததத்தரும் பரம்.

—

63.அ பஞ்சருணமத்துக்கு மருந்து.

உத்தாமணிகொழுந்தும் மிளகும் அரைத்து கொட்டை பாக்களவு இப்படி 10-நாளைக்கு தின்னவும்.

சிறு துமட்டிகாயும் சதிரகள்ளியும் கல்லுப்பும் ஆடுதின்னாபாளையும் எல்லாம் பக்குவத்துடனே புடம்வைத்து காயவைத்து பொடித்து வஸ்திரகாயம் பண்ணி 10- நாளைக்கு தின்னால் திணமாகும்.

—

எட்டி தின்ன பேர்க்கு

பருத்திவேர் அரைத்து குடுக்கவும். கொல்லை பல்லா பாடிங்கி வந்து பொடி செய்து குடுக்கவும். சோறு சொங்கும் நாவல் பட்டை ஆ. அரைத்து குடுக்கவும். சுக்கு அரைத்து குடுக்கவும். தாமரை கிழங்கு அரைத்து குடுக்கவும்.

ஒரு தலை வலிக்கு

பொன்னாங்காணி இலையும் சிறு குறிஞ்சா இலையும் சினைபாலிலரைத்து நசிய மிடவும். தாளாத பேருக்கு தலைல் ஆட்டுபுத்தி பாடிக்கவும்.

பட்டை பூச்சிவாசி

நாத்தாமரை வேர் பாடிங்கி வந்து வாயிலடக்கி கொண்டு மருந்து வைத்து மார்பிலே உறலாடிக்க நோகாது.

64:அ நரிபயத்தன் இலைக் கொண்டு வந்து வேக வைத்து நன்றாய் பிசைந்து கருபட்டி தின்று போட்டு இந்த சாறு குடிக்க வயிற்றி லிருக்க பட்ட பாம்பு அறும்.

எலிகடி எரப்புக்கு மருந்து

செவ்வல்லகிழங்கு கொண்டு வந்து பசுமை தயிரால் குடிப்பா குடிக்க எலிகடி கிரப்பு நிற்கும்.

வாதத்துக்கு

அருகன்புல்லு சார் நாழி, குப்ப மேனிசார் நாழி, சதிர கள்ளி சார் நாழி, வேப்பெண்ணை = உரி, பசுவின்நெய் = உரி, குங்கிலியம் = உரி, வெங்காயம் சார் - உரி, உள்ளிசார் - உரி வசம்பு, மிளகு கூட்டி கொதிப்பித்து மேலால் போடவும் தீரும்.

ஆ. வெப்பாலை பட்டை நீரில் தெய்த்து ஆமணக்கெண்ணை, உள்ளி, வசம்பிட்டு இந்துப்பு பெருங்காயம் கூட்டி எண்ணை பண்ணி நக்க சினை சொன்ன வாதம் தீரும்.

ஊதுகாமாலைக்கு மருந்து

எருப்பாட்டு மூத்திரம், ~~[illegible]~~ வெள்ளுள்ளி, மிளகும், மஞ்சள், வெல்லம், நல்லெண்ணை இதுவெல்லாம் கலந்து அரைத்து உள்ளுக்கு கொள்ள காமாலை தீரும்.

65:அ

மருவுக்கு மருந்து

பாம்பு நடந்து போன மண் விநாயகன் கோயில் சன்னதியில் தடவ மருவு போகும்.

14.2.92

மயிர் வளர மருந்து

ஆலான் விழுது எருமை மோரால் அரைத்து பூசுகவும்.

முசுமுசுக்கை வேர், பொன்னாங்காணி வேர், நீர்சூலா வேர் இந்த வகை மூன்றும் எலுமிச்சன் காயளவு இள வென்னீரால் அரைத்து கொள்ளவும்.

பித்தத்துக்கு மருந்து

? ..பிறாய் வடக்கே போற வேர் பட்டை வெட்டி உழக்கு நாழி மோரால் ஊற போட்டு மத்தாநாள் நாழி மோர் பருந்து குடிக்கவும். பித்தம் தீரும்.

ஆ. சொத்தை பல்லுக்கு

சார்வலை வேர் சதைச்சி நல்லெண்ணெயில் பிசா வலிக்கிற பல்லு மேல் வைத்து தாடையாலும் தடவா மறுபாகமாக கல்லால் தடவு அதிர் வெய்யிலிலே பருக்க அசுகு பறமாட்டுவாகும் தீரும்.

கண்ணுக்கு

இரண்டுபடி மிளகு, ஒருபடி சுக்கு வெள்ளைவெங்காயம் ஒருபடி, அரப்பொடி ஒருபடி [illegible] ஒருபடி, எலுமிச்சன் பழம் - 20 நல்லெண்ணை உழக்கு காசிலான் கண்ணை - [illegible] இதுவெல்லா

(தொடர்ச்சியாக இலைகள் காணவில்லை)

மீண்டும் இலைஎண் 21 லிருந்து தொடங்கப்பட்டுள்ளது.

21.அ வாதசுர நிதானம்

முகம் கருத்திருக்கும் உதடு உலர்ந்திருக்கும் சரீரம் நோகும் நினைவெடுக்கும் உஷ்ணம் போலிருக்கும் உடம்பு பாரிசிருக்கும் மலம் கட்டுபட்டிருக்கும் குளிர் வரும் இதுக்கு மருந்து நடிநாணை வேர், சங்கம் வேர், ஊதணுகிரந்தி கடுக்காய் - 20 இத தட்டி யொருநாழி தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய் காய்ச்சி குடிக்க வாத சுரம் தீரும்.

ஆ. பித்தசுர நிதானம்.

நித்திரை வரும் பாயில் கிடைகிடாது மூர்ச்சை வரும் போலிருக்கும் வாக்கல் எடுக்குறா போலேயிருக்கும் சுபத சுண்டாயிருக்கும் இதுக்கு கஷாயம்: கொத்தமல்லி, சதாகுப்பி, அதிமதுரம், சுக்கு, வெட்டிவேர், ஆடாதொடை யாகரு, கோரைகிழங்கு, தண்ணீர் விட்டான்கிழங்கு, முசுமுசுக்கை வேர் இந்த 9 வகையும் சமனாக தட்டி யொருநாழி தண்ணி விட்டு எட்டிலொன்றாய் காய்ச்சி யொருத்தர் குடிக்க பித்த சுரம் போகும்.

—

சேற்றும சுர நிதானம்

முகம் வெளுத்திருக்கும் மார்பு
22அ. நோகும் விக்கலெடுக்கும் இருமல் வரும் எரைப்பெடுக்கும்
உடம்பு தினவெடுக்கும் நாக்குருசி தெரியாது சுவாசம்
விட்டால் நோகும் தாகமெடுக்கும் பிடரி நோகும்
மேல் சுவாசம் வாங்கும் இதுக்கு மருந்து.

கண்டங்கத்திரி வேர், சிறுகுறிஞ்சான் வேர், வெட்டி
வேர், சீந்தில் தண்டு சிறுதேக்கு சுக்கு இந்த 6-
வகையும் சரியாய் கூட்டி யருநாழி நீர் விட்டு
எட்டிலொன்றாய் காச்சி கொடுக்க சேற்றும சுரம்
தீரும்.

அசிரண சுர நிதானம்.

அடிக்கடி இளைப்பு வரும் விக்கலெடுக்கும்
மந்தமாயிருக்கும் பிளாதப்பமெடுக்கும் நெஞ்சு
ஆ. நோகும் இதுக்கு மருந்து கண்டங்கத்திரி வேர்,
சீந்தில் கொடி சுக்கு இது சமன் கூட்டி யருநாழி
தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய் காச்சி
யருந்து திப்பிலி சுட்டு மேல் பொடி தூவி குடுக்கவும்.

அதிசார சுரம் நிதானம்

அடிக்கடி வயறு போகும்
அதிகமான சுரம் அடிக்கும் சரீரமெல்லாம் நோகும்
வேர்க்கும் தாகமெடுக்கும் அலச்சல் படும் குளுந்த
? ~~சாதம்~~ சோற் கேளப்பா இதுக்கு மருந்து

23:அ. அதிவிடையம், சுக்கு, கோரைகிழங்கு பெருமரத்து
பட்டை வில்வம் வேர் மாதாளங்காய் ஓடும்
இந்த 6 வகையும் சமன் கூட்டி யிருநாழி
தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய்காச்சி குடிக்கவும்

பூதசுர நிதானம்

குமாரகண்டம் போல் வலிக்கும்
சுரம் வந்தவுடனே மறலாமாக்கும் கண்ணை
உருட்டி முழிக்கும் தலைமயிரைபிடித்திருக்கும்
பாடுவான் ஆடுவான் நடுக்கல்வரும் பாலும்
சோறும் வெண்டிருக்கும் நித்திரை வரும் இது
அசாத்தியமானது தொந்த சுரம் 6 வகை என்னபடும்.

ஆ. அவைகள் 1. வாதபித்த தொந்தசுரம், 2. பித்தசேத்தும
தொந்தசுரம் 3. பித்த வாததொந்தசுரம் 4 சேத்தும
பித்த தொந்த சுரம் 5. சேத்தும வாத தொந்த சுரம் இந்த
6 வகை அறிந்து கொள்டு இதுகளுக்கு கசாயம்.

சீந்தில்தண்டு, கோரைகிழங்கு, சித்தாமுட்டிவேர்,
உத்தன்குதும்பை, நிலவேம்பு, கடுக்காய், சுக்கு,
பேய்புடல், கஞ்சாங்கோரை இந்த 9. வகையும்
சரியாக கூட்டி இருநாழி நீர் விட்டு எட்டி
லொன்றாய் காச்சி குடிக்க தொந்த சுரம் தீரும்.

சுரம் விடுகிற நிதானம்: வாதசுரத்துக்கு - 7. நாள்
24:அ பித்த சுரத்துக்கு - 6 நாள் தொந்த சுரத்துக்கு - 10 - நாள்

சேத்தும சுரத்துக்கு 9-நாள் இந்த கெடுவுபடி அசிரண சுரம் அதிசார சுரம் சூத சுரம் யிந்த 6 வகைக்கும் கெடுவில்லை நவசுரங்கள் 5.க்கும் அவுத்தம் கொடுப்பது இதுக்கு கசாயம்

சித்தக்காது, பற்பாடகம், வெட்டிவேர், விலாமிச்சன் வேர் சுக்கு சந்தனம் யிந்த 6 வகையும் சாயாக தட்டி யருநாழி தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய் காச்சி குடிப்பது தாப சுரம் தீரும்.

சன்னி வாத சுரத்துக்கு

சீந்தில் தண்டு, ஆடாதோடையரிசி நிலவேம்பு, பற்பாடகம், சுக்கு, சிறுகாஞ்சொறி வேர், சித்தாமுட்டிவேர் இதுவெல்லாம் தட்டி பதக்கு நீர் விட்டு நாழியாக காச்சி குடிக்க சன்னி வாதம் தீரும் இப்படி அறிந்து குடிக்கவும்.

லிங்க சுத்தி

25.ஆ

சாதிலிங்கத்தை தண்ணீர் வார்த்தரைத்து அடை போல் தட்டி சிறு கலசத்தில் பசுவின் பால் வார்த்து வடிகட்டி அதின் மேல் சட்டியால் மூடி சீலைமண் செய்து பாட்டுபோல் வேக வைத்து எடுக்க சுத்தியாம்.

எலிபாசாணம் துணியால் முடித்து பானையில் சுண்ணாம்பு கல் போட்டு குருணி தண்ணீர் விட்டுக் கரைந்த பின்பு அந்திரமா கட்டி எரிக்க சுத்தியாம்.

துத்தம் காடியாலும் எலுமிச்சம் பாளையாலும் கழுவ சுத்தியாம்.

நாபி சுத்தி

நாபி ஒரு குருணையில் போட்டு
ஆ. கோமயம் விட்டு அதில் பொன்னாங்காணி சிறுக்கீரை இது அரைத்து பானையில் தண்ணீரில் கரைத்து பானைக்கு வெடுகட்டி மட்டுபோல் சுட சுத்தியாம். பிறகு பசுவின் பாலில் இதை அரைத்து நெருப்பில் சுட சுத்தியாம்.

கெந்தக சுத்தி

கெந்தகம் ஒருபலம் பானையில் மோர் இரண்டுபடி விட்டு பொன்னாங்காணியும், சிறுக்கீரையும் மடித்து பானையில் போட்டு ஒரு பானைக்கு வெடுகட்டி அதின் மேல் அரைத்த ஒருத்து வைத்து மேலே கெந்தகம் வைத்து மேல் சட்டி மூடி எரிவிட சுத்தியாம்.

26.அ. வெங்காரம் எருமை சாணியால்
கருவா கரண்டியால் எரித்தால் சுத்தியாம்.

அரிதாளம் பாளையால் யருநாதி
பசும் பால் ஊட்டு ஏடுகட்டி பொன்னாங்காணி
சிறுக்கீரை அரைத்து மட்டு போல் சுட சுத்தியாம்,

ரசம் சுத்தி உட்டரை செங்கல்தூள்
மஞ்சள்தூள் சுத்தாணடி கிதுகளிலே தணியா
மறைத்திக்க சுத்தியாம்.

நேர்வாளம் துணியால் குடிந்து சாணி
கரைத்து அதிலே சாமம் வேக போட்டு எடுத்து
பருப்பை போக்கி இலையே வாங்கி போட்டு
ஆ. பிறகு சுத்தாணடி சோற்றில் வேக போட்டு எடுத்து
அதின் பிறகு சிறுகீரையால் வேகவைக்க சுத்தியாம்.

மனோசிலை சுத்தி பொன்னாங்காணி
சிறுக்கீரை இடித்து பிழிந்து பசும் பாலும் கட்டி
பாளையால் ஊட்டு அந்திரமாக எரிக்க சுத்தியாம்.

27.அ. சன்னிவாத கேசரி தயலம்

வெப்பகுந்து, சற்பகண்டம்,
மிளகு, திப்பிலி, வசம்பு, சதாகுப்பை, சுத்தந்தை
பச்சை பாம்பு கண்டம், கடுகுரோகணி, வட்ட

திருப்பா, ஊசி மல்லிகை, மலைமஞ்ச(ள்), தண்ணீர்
மீட்டான் கிழங்கு, கோரோசனை, கிராம்பு
திங்கிலியம், நிலவேம்பு, நிலகடம்பு, மரண்டை,
ஆடாதொடை, காட்டெருமைபால், தேவதாரி,
எருக்கிலைசார் நாபி இதில் மருந்தெல்லா அரைத்து
ஆ. நல்லெண்ணை நாபி வேப்பெண்ணை நாசிக
பதத்தில் அடித்து வைத்து கொண்டு ஒரு நாளைக்கு
அரை கரண்டி சாப்பிடவும் இதில் தீரும் வியாதி
வாதசன்னி, வாதசுரம், சோபை, [illegible]பாகம்,
அத்திசன்னி, மலட்டு சன்னி, ருத்திராங்க சன்னி,
மேகசன்னி இதுகளுக்கெல்லாம் மேலுக்கும்
பூசவும் தீரும்.

மாத்திரை

சாதிக்காய், சாபத்திரி, லவங்கம்
ஏலம், திப்பிலி, மிளகு, அதிமதுரம், வாய்விளங்கம்,
? ஆச்சா சோப்பு பொலுசு இலை, கடுக்காய், மோடி
28அ. சீரகம், தான்றிக்காய், கருஞ்சீரகம், மனை
தாளிசு, புளியன்கொட்டை மேல்தோல்
எலவனபிஞ்சு, ஊளாங்கி பிஞ்சு, வாழைப்பூ,
அலிம்பு, நாககொட்டை, தென்னம்பூ,
மரம்பட்டை, நாக பட்டை, அரசம்பட்டை
அத்திபட்டை, வேலான் பட்டை, ஆலான் விழுது

17.2.92

இது வகைக்கு வராகனிடை -1 அபின் வராகனிடை-2
இதுவெல்லாம் கூட்டி எருமை தயிரால் அரைத்து
7 புடம் அரைத்து வைக்கவும். இதுவெல்லாம்
புளியன் கொட்டை மருபாதி உருண்டை பன்னி
நிசுவலத்தி வேப்பம் பட்டை மரம் பட்டை
ஆ. நாகபட்டை அத்திபட்டை இதுநாலும்
கசாயம் வைத்து அதில் ஒரு வராகனிடை வைத்து
ரெண்டு வேளை சாப்பிடவும். பசாரம் நிற்கும்.
தயிர் சோறும் சாப்பிடவும்.

மார்பு நோவு சுவாசகாசம் வாதம் வீக்கல் இருமலுக்கு லேகியம்

வில்வபட்டை இடித்தது பலம்-30
இதை ஒரு பானையில் போட்டு நாலு மரக்கால்
தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய் காய்ச்சி
வடித்து கொண்டு அந்த கசாயத்தில் பழைய
பனவெல்லம் பலம்-30 கரைத்து வடிகட்டி
கொண்டு இள பதமாக காய்ச்சி அந்த பதத்தில்
29அ கட்டை சுக்கு சுக்கு மேல் தோல் சீவி போட்டு
பலம்-3, கொடிவேலி பலம்-1, திப்பிலி பலம்-5
செவ்வியம் பலம்-5 தாளிச பத்திரி பலம்-5 சிறு
நாகப்பூ பலம்-5 திப்பிலி மூலம் பலம்-2

கொடிவேலி பலம்-1, ஏலம் காசிடை பலம்-3,
லவங்கம் காசிடை பலம்-3, லவங்க பத்திரி
காசிடை பலம்-3, சீரகம் பலம்-1, கருஞ்
~~சீரகம் பலம்~~-1 ஆக 13 வகை அரைத்து
இடித்து வஸ்திரகாயம் பண்ணி முன் கசாயத்தில்
கலந்து பதமாக காய்ச்சி லேகிய பக்குவமாய்
எடுத்து கொண்டு தான்றிக்காய் பிரமாணம்
கொள்ளவும். இதில் தீரும் வியாதி:- உளைவு,
ஆ. வாதம், சயம், பயாத்தியம், சுரம், வீக்கல்,
இருமல், சுவாச காசம், மார்பு நோவு, வயிற்
பாய்ச்சல், சந்நிகுன்மம் அசீரணம் இதுவெல்லாம்
தீரும்.

சுரக் குளிகை.

30.அ

கெவுரி பாஷாணம் வீராகனிடை-1,
வெள்ளை பாஷாணம் வீராகனிடை-1, நாபி
வீராகனிடை-1, ரசம் வீராகனிடை-1, கெந்தகம்
வீராகனிடை-1, தேத்தான் கொட்டை வீராகனிடை-1,
நிர்புலங்கம் கொட்டை வீராகனிடை-1 திப்பிலி
வீராகனிடை-1, கடுக்காய் வீராகனிடை-1
உத்தாமணி வேர் பட்டை வீராகனிடை-1 இது
வெள்ளம் கூட்டி குப்பைமேனிசார் விட்டு

ஒரு சாமமரைத்து சிறு பயறு ப்ரமாணம் குளிகை பண்ணி இஞ்சி சாற்றிலாவது சுக்கு கஷாயத்திலாவது சரமெனப்பட்டதெல்லாம் தீரும். இதுக்கு பத்தியம் துவரம் பருப்பு

ஆ. சிறுவழுதுகைகாய், மிளகுநீர், உப்பு புளி ஆகவும் ரசத்துக்கு குப்பைமேனி சாற்றில் குடுக்கவும் ரசம் தீரும்.

சன்னிக்கு எண்ணை

ஆடாதொடை, வட்டத்திருப்பி, பேரலம், கோஷ்டம், அதிமதுரம், சீரகம், கருஞ்சீரகம், உள்ளி, வசம்பு, சினைப்பால் உடுக்கு, முசுமுசுக்கை இதுவெல்லாம் அஞ்சுசெண்ணையில் போட்டு காச்சி வடித்து உள்ளுக்கு குடுத்து மேலுக்கு பூசவும். அதன் பிறகு சின்னபொட்டணம் கட்டி காச்சி ஒத்தடம் போடவும் சன்னி தீரும்.

31.அ. முசுமுசுக்கை கொண்டு வந்து சினைப்பாலில் பிசைந்து புசிந்து சட்டி காய வைத்து அதில் மணல் போட்டு வறுத்து கொட்டி போட்டு அந்த பாலை ஊற்றி யருந்துக் குடிக்க சன்னி தீரும். அலட்டுசன்னி நெல்லு மருதால் வேரும் முசுமுசுக்கை வேர்கண்டை-1 கூட்டி அரைத்து 3-நாள் குடிக்க அலட்டு சன்னி தீரும் இது கைகண்டது.

ஆ: கழிச்சலுக்கு கட்டு மாத்திரை

இலை கடுக்காய், பிஞ்சு கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், சோம்பு, யிதுப்பு, கொல்போல்து காய் இது அரைத்து கசாயம் காச்சி காசுகட்டி கொட்டை பாக்கு இது ரெண்டும் கலந்து கசாயம் வைத்து அரைத்து கடலை பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு அந்த கசாயம் கொடுக்க கட்டுபடும் நாயுருவா குசல் கொண்டு 3 கு வாசை நிறுத்து கத்திரிச்சு ஒரு பானையில் போட்டு காசிக்கு மிளகு பலம் 2, வெள்ளை சாட்டரணைவேர் பலம் - 3, வசம்பு பலம் - 1
3½ அ. இது மூன்றும் காக்கி போட்டு கூட வெற்றிலைக்கு சுண்ணாம்பு தடவி கூட போட்டு குருணி தண்ணீர் வார்த்து நாழியாக காச்சி 3-நாள் குடிக்க கிராணி கழிச்சல் போகும்.

பஞ்சமூல கசாயம்

சித்தாமுட்டிவேர், பேராமுட்டிவேர், நாமபாலைவேர், சிந்தில்கொடி, சிள்ளிவேர், வசனிவேர், பயற்காலிவேர், ஆடாதொடை, உசிதகரை, கடம்பல் கோரைகிழங்கு, வல்லாருகு, வில்வபத்திரிவேர், நிலவேம்பு, காசினாண் கண்ணி, உத்தாமணி, வெள்ளை சாரணை, குப்பைமேனி, தூணை காஞ்சொரி, சோலை

முரிஞ்சான் கருநொச்சில், சுணக்கன் வேர்,
ஆ. சிறுகுறிஞ்சான், கன்னிகாவாளை, சுணைகாவிளை
சிலகருணை, மூக்காவாளை, சில்லு, சுண்ணட,
திடகட்டிவேர், சிவனார்வேம்பு, கஞ்சாங்
கோரை, நாய்வேளா, முசுமுசுக்கை, குமிளான்
வேர், சாட்டரணைவேர், வட்டதிருப்பி, வட்ட
கிலுகிலுப்பை வெள்வேல், பேய்புடல் கீழா
நெல்லி நிலைவேர், முருநெல்லிவேர்......
பற்பாடகம் ஊதா ஜகரந்தி அம்மான்பச்சரிசி
நிலவாரை முக்கதாளி, நரிபயந்தான் நெல்லி
முள்ளி தும்பை பண்ணை எழுமிச்சன்வேர் அண
முருங்கை காய் பத்திரி குமட்டிக்காய்
சிக்கரட்டை துத்தி சிறுக்கீரை இந்த 64
33அ. வகையும் வேரும் கூட்டி கந்தாச்சு இரு
பானையல் போட்டு வெள்ளம் தண்ணீர் ஊட்டு
படியாக காச்சி யருந்து கொண்டு கடை சரக்கு
பரங்கிபட்டை, மறப்பன்கிழங்கு, சாதிக்காய்,
சாதிபத்திரி, ஏலம், லவங்கம், லவங்கபத்திரி,
தாளிசபத்திரி, மோடி சுக்கு, திப்பிலி, துபிபராஷ்டி,
கொத்தமல்லி, வாய்விளங்கம் கோரோசனை,
பெருங்காயம் கண்டு பரங்கி மிளகு, சீரகம்,
ஓமம் கருஞ்சீரகம் அக்கலகாரம் கோஷ்டம்
இந்த 64 வகையும் சூரணம் சாப்பிட்டால்
ஆ. இல்லாவிட்டால் லேகியம் பண்ணிசாப்பிட்டால்
இதுக்கு தீரும் வியாதி:- 64 வகை வியாதியும் 32
வகை கிராணியும் 18 வகை குட்டம் 16 வகை
மாரமயம் 21 வகை மேகம் 8 வகை குன்மம்
5 வகை சூலையும் தீரும்.

மகா பஞ்சிவா தினகை

34. அ.

ரசம் வீராகனிடை -1, வெங்காரம் வீராகனிடை-1, நேர்வாளம் வீராகனிடை-1, சுக்கு வீராகனிடை-1, மிளகு வீராகனிடை -3, புளியன் பட்டையில் சாம்பு கற்பம் பண்ணி அந்த கற்பம் வீராகனிடை - 6 இதுவெல்லாம் தட்டி மின் மாச்சிலரைத்து குன்டுமணி மறுபாதி தினகை பண்ணி இஞ்சி சாத்திலாவது முலைபாலி லாவது யிட சுரம் தீரும் பத்தியம் கடினமாக இருக்கும்.

ஆ. **கால்கை எரிச்சலுக்கு**

